உ

சிவமயம்

# கண்ணகி அம்மன்

## காவியப் பாடல்கள்



தொகுப்பாசிரியர்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கரும்பு மிளநீருங் காரெள்ளுஞ் செந்தேனும்
விரும்பு மவல்பயறும் மென்மேலும் - அருந்திக்
குணமுடைய ராகவந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

# கண்ணகியம்மன்

## ஊர் சுற்றுக் காவியம்
## மழைக் காவியம்


தொகுப்பாசிரியர்:
புலவர் நாகமணி விநாயகமூர்த்தி
சேனைக்குடியிருப்பு
கல்முனை.




1வது வெளியீடு: 15.05.2009
2வது வெளியீடு: 10.05.2015


விலை:- 155/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கண்ணகிதாசன் நா. விநாயகமூர்த்தி அவர்களின்*

## முன்னுரை

கண்ணகை அம்மன் வழிபாடு காலத்தால் முந்தியது. பறம்பு மலையிலே பத்தினித் தெய்வமான கற்புக்கரசி கண்ணகியின் வாழ்க்கை வரலாறு காலத்தால் வென்றது. சித்திரச் சிலம்பின் சீர்மலிந்த இக்கதையை இளங்கோவடிகள் எனும் துறவி சிலப்பதிகாரமாக எமக்கு வடிவமைத்துத் தந்துள்ளார்.

கடல் சூழ்ந்த இலங்கைக் கஜபாகு மன்னனின் காலத்தின் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்ற கண்ணகி வழிபாட்டினை கிழக்கிலங்கை தோறும் நடைபெறுகின்ற கண்ணகி விழாக்கள் சான்று பகர்கின்றன. கற்பினுக்கணியான கண்ணகி தேவியாரின்மேல் பாடப்பட்ட காவியங்களுள் ஊர் சுற்றுக் காவியம், மழைக்காவியம் ஆகிய இரண்டையும் தேடித் தொகுத்து தங்கள் கரங்களில் தவழச் செய்கிறேன். நம் இளைய தலைமுறையினருக்கு இது பயனளிக்கும் என என்னால் துணிந்து கூற முடியும்.

பக்திக் காவியங்கள் அருகிவரும் இவ்வேளையில் இக் காவியங்களையும் எமது தேடலின்போது தந்துதவிய இறைபதமடைந்த எனது ஆத்ம நண்பர் உயர்திரு. ஜி.கே.சாம்பசிவம் காரைதீவு, என்பவர் ஊர்சுற்றுக் காவியத்தையும், பகிரதி கமலநாதன் தம்பிலுவில் மழைக்காவியத்தையும் உயர்திரு லிங்கேஸ்வரன் ஆலயம், 15ம் கிராமம் பிரதம பூசாரி திருவாளர் நா. ஜெகதீஸன் ஐயா அவர்கள் பட்டிமேடு மழைக்காவியத்தையும் தந்துதவினர். இவர்களோடு எனது நூலாக்கத்திற்கு ஊக்கமளித்த எனதன்பன் பாவலன் கந்தசாமி பு.ளு. பொத்துவில் அவர்களையும் திருமுருகத் தொண்டன் திருக்காசிநாதன் (துறைநீலாவணை) என்பவரையும் என்னால் மறக்க முடியாது. கண்ணகித்தாயின் அருளால் நன்றி கூறி பிரார்த்திப்பதோடு இப்பாடல்களில் காணப்படும் குறை குற்றங்களையும் தெளிவின்மைகளையும் எனது அறிவுக்கெட்டிய வரை திருத்தம் செய்து தமிழ் அறிஞரிடம் செம்மைப்படுத்தி சிறு நூலாக்கி ஈஸ்வரி வெளியீடாக தங்கள் கரங்களில் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

எனது ஏனைய நூல்களுக்கு தாங்கள் அளித்து வந்த ஆதரவைப்போன்று இச்சிறுநூலுக்கும் ஆதரவளிப்பது அருகி வரும் பக்தி இலக்கியப் படைப்பின் தேடல்களுக்கு ஊக்கமளிக்கும் என்று கருதி அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்த் தென்றல் பரதன் கந்தசாமி M.A.
## பணிப்பாரளர், நால்வர்கோட்டம் அவர்களின்

# அணிந்துரை

வழிபாட்டு முறைகள் காலத்தை வென்ற தொன்மை கொண்டது. மனித நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாக அமைந்த கடவுள் வழிபாடுகள் இயற்கையை இறைவனாகக் கண்ட தமிழர் தம் வாழ்வியல் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது, என்பதை வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங்களும் எடுத்து இயம்புகின்றன.

இந்த வகையில் கண்ணகை அம்மன் வழிபாடும் கடசூழ் இலங்கைக் கஜபாகு மன்னன் காலத்திலிருந்து கிழக்கிலங்கை வடக்கிலங்கை மட்டுமல்லாது முழு இலங்கையிலும் "பத்தினித் தெய்யோ" எனப் பேசப்பட்டு நடைபெற்று வருவதை நாமறிவோம்.

சிலம்புச் செல்வி கண்ணகையின் கதையைக் கூறும் சிலப்பதிகாரத்திலே **அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும் உரைசால் பத்தினி உயர்ந்தோர் ஏற்றலும் ஊள்வினை உறுத்து வந்தூட்டும்** என்ற உயரிய தத்துவத்தினை சித்தரித்துக் காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

கிராமங்கள் தோறும் வைகாசித்திங்கள் விழாவெடுத்து மகிழ்கின்ற வழிபாட்டிலே கண்ணகி அம்மன் உற்பத்திப் பாடல்கள், வரலாற்றுப் பாடல்கள், குளுர்த்திப் பாடல்கள், ஊர் சுற்றுப் பாடல்கள், மழைப்பாடல்கள், கும்மிப் பாடல்கள், பொலிப்பாடல்கள், மங்களப் பாடல்கள் காவிய வடிவிலே பாடப்படுவதுண்டு. இப்பாடல்கள் இடத்துக்கிடம் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்பட்டாலும் இவற்றுக்கிடையே ஒரு பொதுவான தன்மையினை அவதானிக்கலாம்.

இச்சிறு நூலின் தொகுப்பாளர் புலவர் நாகமணி விநாயகமூர்த்தி அவர்கள் கிராமிய இலக்கியங்களிலும் குலதெய்வ வழிபாடுகளிலும் மிகவும் ஆர்வமுள்ளவராக புலவர் அவர்கள் காணப்படுகின்றார். நம் இளையதலைமுறையினருக்காக இவர் செய்யும் இப்பணி பாராட்டப்பட வேண்டியவையாகும். இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவது அனைவரதும் கடமையாகும். இவரது இறை பணிகள் தொடர வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜீ.கே. சாம்பசிவம்** J.P.
தலைவர், முதியோர் சங்கம்,
கலைக்கோட்டம் காரைதீவு - 04.
**அவர்களின்**

## வாழ்த்துரை

கிழக்கிலங்கையின் புகழ்பூத்த தொன்மைமிக்க சைவத் தமிழர் கிராமமான மருதமொடு வயல் நிலங்கள் சூழச் செறிந்திலங்கும் சேனைக்குடியிருப்பில் கலைபரப்பும் கவிக்குயில் கலாபூஷணம் நா.விநாயகமூர்த்தி அவர்கள் கண்ணகி அம்மனின் காவியங்களில் முதன்மையான ஊர்சுற்றுக் காவியம், மழைக்காவியம் ஆகிய இரண்டையும் தொகுப்பாக்கி இங்கு தந்துள்ளார்.

அன்னை எனும் அற்புதமாகப் பொருள்படும் அம்மா என்ற புனிதச் சொல்லின் பொருளாய் இருப்பவளே சக்தி, அன்பு நிறைந்தவள், அண்டமெல்லாம் காத்து இரட்சிக்கும் தாயவளின் கருணைக்கு எல்லையே கிடையாது. எவ்வுயிர்களிடத்தும் ஆதார சக்தியாக மிளிரும் அன்னையை பணிந்து புகழுடன் நலம் எய்தியவர்களின் வரிசையை அடுக்கிக் கொண்டே போகலாம். அந்த வரிசையில் புலவர் நாகமணி விநாயகமூர்த்தியும் இடம் பெறுகின்றார். இவரின் தேடல்கள் போற்றப்படவேண்டியவையாகும். என்று அன்னையைப் பிரார்த்தித்து அன்னாரை வாழ்த்துகின்றேன்.

அறிஞர் உலகம் இவரின் ஆக்கப் பணியினை உவந்தேந்துக் கொள்ளும் என்பதோடு உண்மையான இக்காவியப் பாடல் புத்தொளியும், புதுமலர்ச்சியும், புதுமணமும் பொலிந்து விளங்கும், இந்நூலுக்கு வாழ்ந்துரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது பணி தொடர வேண்டும் என்றும் இந்நூலை படிக்கின்ற அன்பர்கள் அனைவரும் அம்பிகையின் அருள்பெற்று வாழ்ந்து வளம் பெறுவோமாக.

அம்பிகையை சரண் புகுந்தால் அதிக சுகம் பெறலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# கண்ணகை அம்மன் ஊர் சுற்றுக் காவியம்

## காப்பு



வீசுகர மேகநிற வேதநுத லாள்கருணை
மேவுமத வாரண விநாயக விநோதா
சேசுருதி மேருவினிற் பாரதமிழ் கோடு கொடு
சேமமுற வேயெழுது சேர்கருணை யோனே
கூசுமதி சேர்நுதலி கோமள வலிக்கோர்
கொஞ்சுமத லைக்களப குஞ்சர முகத்தோய்
பேசுதமி ழின்கதைக ளேபாடு தற்குஒரு
பிழைகள்வா ராமல்அருள் பேழைவயிறோனே.

## நூல்

ஒற்றைநவ ரெத்னமணி ஒப்பரிய சுற்றனை
ஒப்பெழுகு தவப்பெரிய தொப்பைவயி றப்பனைச்
சித்திரமெ னத்தகுதி யப்பெரிய வெற்பனைச்
சித்தியென அத்திமுக வித்தக மருப்பனை
முத்தக மெனத்தகு முகப்பான முதல்வனைத்
மூவருக் கருளும்வகை செய்தருளு மூர்த்தியை
மத்தமத மொத்தபனை யொப்பனைய கையனை
மகாகணப திக்கடவுள் தன்னைமற வேனே 1

சீரிதா னபணி யாரமவல் எள்ளுண்டை
செந்தே னுடன்பாரு செவ்விள நீரும்
வாரியே குடவயிறு தன்னிலே வைக்கின்ற
வள்ளலே யானைமுக வரத பண்டிதனே
நாரிபுரிகன் திருக் கொம்பனைய நம்பியே
நாளுமடி யார்கள்வினை போயகல வேணும்
பாரிதரி யெம்மைப் பரிந்தென்று மாளுவாய்
பாரதங் கோடதனி னால்எழுது வோனே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டெனக் குற்றருள் சுப்பிர மணி யப்பனே
மற்புயப் பொற்குற மடந்தைமீ தருள்வோன்
விட்டதிற் பத்திவைத் தட்டமைச் சித்திர தமிழ்
வெற்பினிற் பத்திவைத் தேற்றுகா ரணனே
சுட்டெனச் சர்க்கரைக் கொக்கமுக் கியகையில்
கொட்பரைச் சிற்பரத் துற்றவேள் முகனே
பட்டெனப் பொற்பரிக் கற்பகப் பிள்ளைபொற்
பக்கிசத் துற்றிறற் பத்திவைத் திடுமே 3

## வேறுசீர்

திங்கட் செறித்தவட கொம்பைப் பிடித்துவளர்
செம்பொற் பொருப்பிலுற நம்பிப் பொறித்தவா
வெங்கட் கழுத்தசுரர் மங்கிக் கெடச்செருவில்
வெம்பித் துறந்தொரு தும்பிக்கை வெற்பே
சங்கைக் கரத்திலணி சதங்கைத் தரித்தமுகில்
தங்கைக்கு தங்குவட மங்கைக்கு மதலை
கங்கைச் களிச்டைகொள் எந்தைக்கு மைந்தனே
கம்பக் கரிமுகவனே காத்தருள் வாயே 4

இந்தைத்திற லங்கப் புண ரங்கப்பிரி யன்புற்று
இன்புற் றடைந்தசடை யன்புற்ற மதலாய்
திந்தொத்த மென்றொத்தி என்றொத்தி அம்பொற்
சிலம்பைப் புலம்வரு சேவடி யோனே
வந்தொத்த சந்தத்திரள் வம்பட்டொரு துய்ய
வங்கப்புணர் செங்கைச்சிலை துங்கக்கரி முகவா
கந்துற்ற சந்தத்திரள் களம்பற்றி யன்புற்று
கஞ்சப்புவி வாழும்கற் பகப்பிள்ளை யாரே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுசீர்

மத்தகனை விகடதட கடகசெந் தூரனைக்
மால்மரு கோனைமயி லேறிமுன் னோனைச்
வித்தகனை கனகசா மரைகள்போ லென்னை
விரதணன் குலதிலக வேள்தன்மைத் துனனை
அத்திதனைய றுரித் தம்பலத் தேயாடும்
அரனார்தன் மதலையை ஐங்கரத் தோனை
முத்திதரு வேழமுக னைப்பழ மருந்தியை
முந்தியே பாடவினை சிந்திஓ டிடுமே. 6

முண்டக மலர்ந்ததுபோ லேதிரு முகத்தனை
முடியவுங் கமலமலர் தேடியுங் காணா
அண்டர்தொழு தம்பிரான் என்தம்பி ரானே
ஐங்கரனே துங்கமத ஆகுவா கனனே
வெந்திநற் சூலமும் பாசமுங் கைக்கொண்டு
வெங்கால தூதர்கள் வந்தாலு மிப்போ
தண்டையுங் காலுஞ் சதங்கையு மாய்வந்த
தம்பி கண பதியேநீ அஞ்சல்என் னாயே. 7

மாதுலஞ் சேர்காவல் மாறாமல் மாறியிட
மாயையாய் வந்தகலை யூர்தியை நிறுத்தி
ஆதவர்க ளுய்யவே பூதனை முலைப்பால்
ஆவிய தருந்திஉரல் சகடற வுதைத்து
மோதுமத மாமோது மல்லரை முடுக்கியிடர்
முன்னின்ற மாமனை முடித்தலை துணித்தே
பூதல மதிக்கவரு மாதவா கேசவா
புன்னாலை நாரணா பொதுவர்நா யகமே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேசவா என்றமொழி நாமுரை செய்திடில்
கேடகலும் அவ்வுரை கேட்டிருந் தோரும்
நாசமிலை யாரேனும் ஆயிரந் திருநாமம்
நவில்இந் திரர்பதம் நல்கிடும் பெருமை
தூசரர் தெலுங்கர்மக தேசர்பன் னிருநாடர்
துளுவர் கங்காளர்மழு வர்சீனர் கபிலாடர்
பூசுரரொப் பாதவர்கள் புகழவரும் அச்சுதா
புன்னாலை நாரணா பொதுவர்நா யகமே 9

வந்துமுன் னேநடன சகலகலை வல்லவீ
சக்ரவட மீதுகண் வளருந் தலைவி
உந்திமலர் மீதினில் உதித்தவன் தலைவி
ஒளிசிறந் தருள்பளிங் கொத்தவள் நிறத்தி
இந்துதல் வஞ்சரசி யேஉனை நினைப்பவர்க்கு
இயவாக பாடவரம் இனிதினருள் வாயே
சிந்துசாகை புழுகுபன் னீர்களப கஸ்தூரி
சற்றுங் கருங்குழற் சந்தசரசு பதியே 10

பரகதியை யாவிலுற நாவிலும் நிறுத்திய
பங்கயச் செல்வியைப் பவளவா யாளைக்
கருதில்வரு பிழையேது போதுகண் ணாளைக்
கற்பூர மேனியழ கொப்பவரி யாளைக்
கருமுகி லனையமைக் குழலியைக் குங்குமப்
பாடியிரு சங்கிராமப் பாரமுலை யாளைச்
சரஸ்வதியை யென்னுடைய நாவிலும் கனவிலும்
தமிழ்வளர்த் தாளையொரு சற்றுமற வேனே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதம்பட இரண்டருகு வேதமிசை பாட
இளங்கமுகு குங்கும குளிங்குமுக மென்ன
சதங்கையொடு தண்டைகள் அலம்பவடி மீதே
சலஞ்சல சலமெனும் கோடுகள் ததும்ப
பதங்களொடு தொந்ததோம் தோம்மென் விசைப்ப
பதஞ்சலி வியாக்கிர பரத்துமுனி காணச்
சிதம்பர சிதம்பரவே னுங்கொடிய வன்கேடு
திரண்டெதிர் வந்தவினை சிந்தியோ டிடுமே 12

கப்பான சூலந்தனைக் கொண்டிடக் குத்தியே
காலன் கயிற்றினாற் கட்டிப் பிடித்து
தப்பாம லுயிர்வந்து கொடுபோகு முன்னே
தாடாரென மயிலேறி வரவேணும் முருகா
முப்பாலு மொக்கக் கலந்துதவு தேனே
முருகேச னேநல்ல முத்திக்கு வித்தே
அப்பா திருச்செந்திதூர் யீசாவடி வேலா
அடியேனை வினைவந்து அணுகாமற் காப்பாய் 13

தடவரைகள் கிடுகிடென வடவைமுக மதனில்
சஞ்சலப் படமுடிய சற்பரா சன்றன்
உடலது நெறுநெறென விழியது பிதுங்கியே
உலகுதிசை கிடுகிடென உம்பருக் கெல்லாம்
அடையலர்கள் பொருதுடைய திமிலமிடை யிந்திரன்
அழகுசெறி அழகுபுய மானமயி லேறிக்
கடாவியிலை வடிவுடைய வடிவேலை ஏவுநற்
கந்தர்திரு மலரடிகள் கனவில்மற வேனே 14





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைகொண் டெதிர்மலைந் திடுசூரன் பொடிபடக்
கனகமெண்டிசை யிலுங் கழலினை நினைந்து
உருகுமன் பர்கள்மனம் பரமடைந் திடநினைய
உலகுதனி லுனையன்றி யொருதெய்வ முளதோ
முருகுசெறி கொக்கொட்டிச் சோலைநகர் உள்ளாய்
முந்துதவு ஐந்துகர வைந்துநிற வண்ணல்
இருபதமும் அருள்பரவு தான்தோன்று மப்பனார்
என்னவினை முன்னமுதல் இருபதமு மறுமே 15

நாடோறும் அமுதாகி நற்கோயி லுள்ளே
நற்றேகிப் பின்நின்ற நவரெட்ண மலைபோல்
காடுசெறி வள்ளிமலை தேடியிரு தாமரைக்
கால்நோக வந்ததொரு கடவுள்வே லவனே
தோடேறு மதுவுண்டு வண்டினம் மகிழ்ந்தேறு
சுருதிபா டும்படம்பின் தொங்கலணி மார்பா
மாடேறு சிவயோகி மகனாகி யவனே
வளர்தோகை மயிலேறி வந்துமுன் னடவாய் 16

## வேறுசீர்

பலகனிகள் சொரிதினைகள் விளைபுனம தடரும்
பகர்கிளிகள் புறவினொடு கலைகள்கடி கூர
அலைகயலை நிகரனைய கயலவிழி வள்ளியார்
அவரைமண மருளவொரு தவசிவடி வெனவே
வலைகுறவர் எதிர்கிழவர் எனுமிகுதண் அடிநீறுபூசி
வரும்அவர்கள் இருகைதொழு வளமைகொடு தொடுபார்
உலகுபுகழ் செறிகதிரை நகரில்வரு குமரன்
ஒருமுருக னெனவினைக ளுறுதிசெடி புகுமே 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவையுமை யவளும்வேள் விடையரனு மொருநாள்
தெளியஉப தேசமறி வடவைமுக மதனில்
கருவரிய மதுகரம் தேனுமைக் குழலின்மிசை
சொலுமொழிகள் இருசெவியில் விழஅரனு முனியச்
சருவலையில் மிசையெறிய மகரமொடு வலைகயிறு
தனையுமிகு தவிடுபொடி செய்துஉயர் வரையை
உருவஅயில் விடுகுமர னுறுதிசெறி கதிரைநகர்
ஒருமுருக வெனவினைகள் ஒருவியோ டிடுமே 18

## வேறுசீர்

மூவா யிரத்தொருவ ரானசிவ னிங்கே
முப்பத்து முக்கோடி தேவர்களு மிங்கே
பாவாண ரைப்போய் அழைத்தசிவ னிங்கே
பஞ்சவர்கள் வந்தடி பணிந்தசிவ னிங்கே
நாவாணர் தன்கலி தணித்தசிவ னிங்கே
நாரதரை ரெட்சித்த நான்முகனு மிங்கே
தேவாதி தேவனார் மாடேறு மீசனார்
செல்வனார் வாழ்கின்ற சிவலோக மிதுவே 19

## வேறுசீர்

பருவகம் புயதனம் பொலியுமங் கையரிடம்
பலவிதந் தனில்விழுந் தகமெலிந் திடுமெனும்
குருவெனும் அருள்நினைந் திருபதம் பெறவேணும்
கொடியமலந் தடியவந் தடிமைகொண் டருள்வாய்
இருதடங் குவடுதன் கிரியெழுந் துலகில்வந்து
இலகுசெஞ் சடையிலம் புலிபுனைந்திடுவோன்
திருவுநம் பலவுமம் பிகைநடந் திடநடம்
திகழ்பொன்னம் புரிதொழுஞ் சிவசிதம் பரமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடு சூரனை வதைத்தவே லொன்றுண்டு
வள்ளியிரு கொங்கையை மணந்தபுயம் உண்டு
ஆறுமுக வேடுவர்கள் அடிபரவு தாளுண்டு
அதுவன்றி யேநமக் காறுமுக முண்டு
தாறுசெறி யுங்கமல வூர்திசெறி யுங்கதிர்
காமநக ருண்டுசர வணைப்பொய்கை யுமுண்டு
ஏறுமயி லுண்டுபடை வேலுண்டு யாமுண்டு
இனிமறலி படைகள்வினை என்செய்ய லாமோ 21

மன்னுமலர்ப்பாதி மாதங்கி திரிசூலீ
மாகாளி மாதருக் கரசான தாயார்
மின்னுமணிச் சிலம்பொன்று கரமீதே பெற்று
வீரமுட னேபணிந் தாரமுட னேந்தி
தென்னவன் தெறித்துவிழ நூபுரங் கொண்டு
சிக்கெனவே படிஅடித் தக்கினி எரித்த
கன்னங் கறுத்தமுகில் ஒத்த குழ லம்மையென்
கண்ணகைதன் இருபாத கமலமற வேனே 22

திங்கள்போ லுந்திரு நுதலையுடை யாளைச்
செந்தா மரைமுகத் தாளைஒப் பாளைப்
பொங்குபுக ழாலுயர்ந் தபொற்றி ருவைப்
பொய்யென்ன மெய்யாக வந்துதித் தவளைத்
தங்கள்பழி கொள்ளென்று பாண்டின் முன்னே
சத்துரு தனைமுடித் துயிர்மீள வந்த்
அங்கணாமைக்கடவை தன்னில்வாழ்கண்ணகையார்
அடித்தாம ரைப்பாதம் நாளும்மற வேனே 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைநெஞ் சாரவோவாக நினையாத வாறோ
ஓதுமறை யோனெழுதும் ஊழிவினைகள் தானோ
என்னவினை யென்றறியேன் எனதுசென் னிக்குள்
எய்திய பிணித்துயரம் நீகளைந் தருள்வாய்
தென்னவனை யன்றுபழி கொண்டதிரு மாதே
தேசிகர் குலத்திலே வந்ததெள் ளமுதே
அன்னநடை மாமயிலே தெய்வநா யகமே
அங்கணா மைக்கடவை மருவுகண் ணகையே 24

சிவனா ரிடந்தனி லிருந்துவிளை யாடியே
சிலநாளில் ஒரு பொழுது சிந்தையில் நினைந்து
பவமான பிணிதீரப் படிமீதில் வந்து
பாண்டியன் கூடலின் உள்ளே புகுந்து
தவமான மானாகர் மகளான கண்ணகைத்
தாரணி தனக்கொரு காரணம தான
நவமான அங்கணா மைக்கடவை வாழ்கின்ற
நாயகிதன் நாமமொரு நாளுமற வேனே 25

வட்டவா ரிக்கடல் சூழ்உலக மீதினில்
வாழுமூவு லகத்தான தேவதைக் கெனவும்
இட்டமாய் நற்கனிசொ ரிந்திடும் பெண்பனையை
இன்றுமுதல் ஆண்பனைய தென நினைந் தவளே
பட்டதொரு கோவலனை யும்பிழைப் பித்தாய்
பாண்டியனை வென்றுபழி மீண்டுபுகழ் கொண்டாய்
மட்டுலவு சோலைசூழ் அங்கணா மைக்கடவை வாழ்
மருவுகண் ணகையையொரு நாளுமய ரேனே. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டைநிக ரானவிழி தண்டைநிக ரானமொழி
வாலைமதி சேர்நுதல் மடந்தையர்கள் கூடி
தண்டிய வழக்கதனை இன்றுசெய் பாண்டியன்
தன்னைஎரி செய்திடையர் தன்சேரி காப்பாய்
எண்டிசையில் மன்னர்பரி வாரமொடு போடிமார்
இயல்வீரர் மற்றுமுள வெல்லோரும் நாளில்
கண்டுபணி கின்றதொரு காரேறு சோலைவாழ்
கண்ணகையை யனவரத காலமய ரேனே 27

வாசமலர் மருவுகோ தைமா னனையவிழி
மாதரார் தான்மருவு மாலைதா னகல்வார்
நேசமா மதில்களெழில் வேயனே யுனதுபதம்
நீடுமா தவப்பெருமை கூறுவா ரகல்வார்
தேசுலா வியவிழி ஓரமரோ புகலவரு
சீதளம திகளெழில் தேவர்நா யகனே
ஆசையா லுதவியகண் நேசனே தான்தோன்றும்
அப்பனே அடியவர்க் கருள்கோணா தவனே 28

சிலையொத்த புருவத்தி கயலொத்த நயனத்தி
தெரிசித்திர வடிவேற்பொரு திருமுத்து நகையார்
மலையொப்பென நவரெத்தின வடமிட்டிட தனத்தி
வனசக்கொடி யிடைச்சி மதுரச்சொல் லழகார்
அலைவுற்றிடு மிடிமிக்குள அவையுற்றட ரும்மிக்க
அடிமைகளும் நின்கழல் நித்தம் நினைவார்
கலைமுத்த மிழ்மிகுத்த காரேறு சோலைவாழ்
கண்ணகையை நெஞ்சினில் கருதவினை யறுமே. 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவின்மணி யாலே சமைத்த பொன் னூபுரம்
அன்றுமது ரைப்பதியில் விற்றகோ வலரைப்
பெரியமழு வாலே பிளப்பித்த பின்பு
பேச்சரிய வல்வழக் குப்பேசி வென்று
திருகிவல முலைதென்னன் மேல்விட் டெறிந்தே
சினமாறி யேஇடையர் தெருவீதி வந்து
கருதரிய காரைநகர் தன்னில்வாழ் கின்ற
கற்புடைய கண்ணகை தனக்கடைக் கலமே 30

பொன்னுலவு வணிகர்குல திலதமென வேவந்த
புருக்ஷர்கோ வலர்கையில் பொருளுள்ள தெல்லாம்
மின்னுலவு மாதவி தனக்களித் தேமீள
மிக்கதொரு மணிச்சிலம் பைக்கொண்டு சென்று
தென்னுலவு வழுதியைக் கொலைபடுத் தினைமுலை
திருகிமது ராபுரி எரித்தகற் புடைய
கன்னலெனு மென்மொழித் துடியிடைக் கயல்விழிக்
காரைநகர் அகலாத கன்னிகண் ணகையே 31

பொற்புலவு வணிகர்குல மின்னாகி மாறனைப்
புகழ்வழக் கிட்டனல் புகைகொண் டெழுப்பி
வெற்பனைய வடகரைய தாறுநூ றாயிரம்
மேற்கோடி ராசர்தமை வென்றுகைக் கொண்டு
கற்பதனை உயர்வான இளங்கோ வடிகள்
சொற்கொண்டு தாபித்த கருணைமட மயிலே
கற்கரட விக்கிரம உக்ரமுக மின்னே
காரைநக ரகலாத கன்னிகண் ணகையே 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருவரை யுற்றதன பாரமா தவிதந்த
மெய்யன்பு தீரவொரு கைமுதலில் லாமல்
பாரமா நூபுரம் தனைவிற்க வென்றே
பன்னுதமிழ் மதுரைமன் பதியதனில் வந்து
மாரவேள் ஒத்தவடி வானகோ வலன்றன்
மதுரைமன் கொன்றபழி வாங்கி வருகின்ற
காரைதீ விற்கோயில் கொண்டுவாழ் கின்ற
கண்ணகையின் கமலமலர் கனவிலு மறவேனே 33

மட்டுலவு பொற்பரி புரத்தைமது ரைப்பதியில்
மாறுமுயர் செட்டியை வதைத்திட அறிந்தும்
இட்டபெரு மட்டகிரி யைச்சரிசொல் வட்டமுலை
யைத்திருகி விட்டுநகர் சுட்டர சழித்தாய்
பெட்டெனைய கத்தடிமை யைப்பணி விடைக்குதவி
இடைச்சுவடு தன்கிருபை நின்கருணை புரிவாய்
கட்டுட னடக்குமுயர் காரேறு சோலைவாழ்
கண்ணகையை நெஞ்சினில் கருதவினையறுமே 34

கார்பெற்ற விரிதிரைக் கடல்மீது பெட்டகம்
கண்டுமா னாகருடன் மாசாத்து னாரும்
நேர்பெற்ற பெட்டகம் எனக்கெனவும் உள்ளான
நிதியெனக் கென்னமா னாகரு முரைக்க
பேர்பெற்ற மாசாத்தா ரைக்கண்டு நாணிமிகப்
பின்னிடவும் மானாகர் முன்னிட மயக்கி
சீர்பெற்ற தம்பிலுவில் நகர்வாழ வருகின்ற
செல்விகண் ணகையை ஒரு நாளுமற வேனே 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிபிராமர் தொழவரிய அருள்ரூப மாய்வைகை
ஆறதை அடைக்கமண் ணதுசுமந் தவனைக்
குருசிலென மதியாமல் முதுபுற வடித்த
கோமகனை மதுரைதனை சுட்டெரித்த வளே
தரிசுபுனை பரிபுரச ரோசரசப் பாவை
தன்னையன் றித்தாம ரைதனி லிருந்தும்
கருதுதமிழ் வளமைசெறி துறைநீலாவணை வாழவரு
கண்ணகையை யனவரத காலமய ரேனே 36

சேரமுனை யிற்திரவி யங்களோடு இனிய
மாதவிக் களிக்கமுட் டெனமறிப் பிடவே
ஆரமுனை யிற்சவடி பொற்பணிகள் செப்பிலிட்டு
அவர்கையிற் கொடுவென்ற அன்னமின் னிடையே
பாரமுலை யைத்திருகி மாறனை வதைத்துமுன்
பணிவார்கள் பிணிதீர வருபேடை மயிலார்
வீரமுனை யூர்வாழ வருகின்ற கண்ணகை
மென்கமல பாதமொரு நாளுமய ரேனே 37

சுட்டியார முயர்பொன்னி ஆறுதனில் மூழ்கியே
தோகைமா தவிமைய லாற்றிஓர் புதுமை
எட்டியே நீர்ச்சுழியில் வண்டுபூ வாசத்தை
இனியுண்ப தற்குவமை ஏதெனப் புகல்வீர்
செட்டிதனை ஓர்மொழியில் அன்றகற்றி யிடஅம்மை
சிந்தையுற் றிங்குவா வென்றழைத் தருளும்
பட்டிமே டதனில்வாழ் கின்றகண் ணகைதிருப்
பாதமலர் நாவிலொரு போதுமய ரேனே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்முனை நிகர்த்ததிற விழிமுத்து நகைச்சித்திர
மிகரெட்ண மணிசெப்பு முலைமிக்க தமிழார்
சொல்முனைய தென்னதோர் சுட்டுட னடக்கும்
சுகமுற்று வாழ்வுதர வருபொற்கொ டியனையார்
நெல்விளை மிகுந்தறம் பெருகமுக் கியர்வாழ
நித்தமும் திங்கள்மும் மாரிபொழி கின்ற
கல்முனை நகர்க்குள்வாழ் கின்றகண் ணகைதிருக்
கமலபா தம்கனவி லும்கருது வேனே 39

எத்திசையும் மெய்க்கவே தேருடன் திருநாள்
என்றுமோ ராண்டினில் நடத்தியா வரையும்
குற்றமற முக்குலத்தோர்கள் எல்லோரை யும்தினம்
குறைவற நடத்துமொரு குணரெட்ண மயிலே
கொற்றவனை வாதாடி அன்றுவென் றேஆயர்
கோமகளை அஞ்சல்என் றிடும்அன்ன மின்னே
உற்றபுகழ் சேர்கின்ற வெற்றிசெறி பாண்டிருப்
பூர்வாழ வந்தருளும உலகமா தாவே 40

காரணி நாரணி காளிகங் காளியே
கண்ணன் சகோதரி வண்ணமா மாரி
பூரணி முக்கண்ணி வேதநா யகியே
புகழான மாணாகர் மகளான திருவே
ஏரணி முக்கண்ணி வேதநா யகியே
ஏழையடி யார்கள்வினை ஈடேற்று வாயே
வீரமா காளியே தெட்சணா காளியே
மேவரிய கல்லாறு வாழும்நா யகியே 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழான மாணாகர் மகளான திருவே
பூவையே உனைநினைந் திடில்வந்த வினைகள்
தூகள்போல வேபறந் திடுமுனது கற்பால்
சுந்தரம் வேய்கின்ற சந்தனக் கிளியே
நிகழாமல் அடியேனும் அடியவர் தமக்கின்று
நிறைசெல்வ மேகொடுத் தருளவந்த வளே
மகிழூரின் நகர்வாழ வருகின்ற கண்ணகையின்
மலரடிகள் ஒருபொழுதும் மனதில் மற வேனே 42

இடமிகுபொன் னாடரங் காதனில்மிகு சோழன்முன்
எழில்கொள்லணிக் கோலமும் பூண்டுமா தவியும்
குடமுலையில் மேல்நிறைந் திடுவடமு லாவுமுன்
குதிகள்செய நாடகம் கண்டுகோ வலரும்
மடமினாளுடன் ஆசைகொண் டரிவைதெரு வீதிமுன்
வருகஎம தாகுமென் றிடமன மகிழ்ந்தே
திடமடைவ ரால்உயர்ந் திடும்எருவில் மேவுசெந்
திருவைஒரு நாளும்என் சிந்தைஅய ரேனே 43

சிந்தைதனி லேஅதிக கோபமது கொண்டு
செப்பரிய ஆயர்மனை தனையும்விட் டேகி
வந்துமன வேகமுடன் பாண்டிய னிடத்தில்
வாதாடி நின்றுபரி புரமதை எடுத்து
பந்திதனில் நிற்கின்ற பாண்டியன் றன்னையும்
பண்பில்லாத் தட்டானை யும்எரி செய்த
கந்தமிகு களுவாஞ்சி நகர்குளக் கட்டில்வாழ்
கண்ணகை என்னவினை காதமோ டிடுமே 44





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும்நீ தந்தைநீ அல்லாம லெங்களிட
சஞ்சலந் தீர்ப்பதற் கேயொருவ ருண்டோ
நீயல்லால் வேறுதுணை தமியேனுக் குண்டோ
நிச்சயம தாகஅருள் தந்துவி புரிவாய்
ஏயதோர் செல்வமும் செந்நெல்லின் விளைவும்
இன்பமுட னேதந்து எங்கள்துயர் தீர்ப்பாய்
காயாம்பூ மேனியன் தங்கையென வந்தநீ
களுவாஞ்சி நகரிலுறை கின்றகண் ணகைத்தாயே 45

கொந்துலவு தாதிநங் கோவலரும் அப்போ
குலவுபெறு சிலம்பது விற்கவரும் நாளில்
இந்துலவு கண்ணகைக் கடையாள மெனவே
இயல்புபெறு மல்லிகைப் பூவொன்று நல்கி
சந்துலவு குடங்குணக் கேவந்த போது
தயங்கிடு மெனச்சொன்ன சபதம தறிந்து
விந்தையுட னேகனவு கண்டபத் தினியே
விரைவுகளு வாஞ்சிநகர் மேவுகண் ணகையே 46

கருதரிய வேங்கைமா மரநிழலின் கீழே
கவலையுறு கோவலர் இருபிழப் பதனை
திருவனைய மதுரமொழி சரடூசி கொண்டு
சேர்த்தெழுப் பிச்சொன்ன செய்தியை அறிந்து
கருவனைய பொற்சிலம் பதுதனை யெடுத்துக்
கவர்ந்ததட் டானையும் பாண்டியன் றன்னையும்
மருவரிய வெற்றிகொண் டிடுமானே மின்னே
மகிழ்வுகளு தாவளை வந்தநா யகியே 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றமுட னேஇடையர் வெண்ணையது தடவ
　　இடதுமுலை யைத்திருகி மதுரைசுட் டழித்தாய்
தோற்றமுட னேபுவியில் வைகாசி பூரணைத்
　　தொகுதிபெறு திங்கள்தனில் நான்வருவே னென்று
உற்றதொரு பூசைக ளுந்துலகு தன்னில்
　　அதிகவர மானது தொடுத்தருளி யேதான்
இட்டமுட னேபழு காமநக ருறைகின்ற
　　இயல்பெறு கண்ணகையையென்னாவிலயரேனே　48

மானமுறு மதுரையை அழித்துவரும் நாளில்
　　மனதினில் தணல்வேகம் அறியாத வண்ணம்
ஆனதொரு கன்னியர்கள் எழுவரும் கூடி
　　ஆடலது மஞ்சலின் தேறது எடுத்து
தானமுட் னேழுபேர் வெற்றியது கண்டார்
　　தையலின் கோபமது தானகன் றிடவே
தேனமிர்த மொழிமாதர் உறைகின்ற தேற்றா
　　வெனுந்தீவு புகழவரு செல்விகண் ணகையே　49

கலையுநீ சமயங்க ளானதொரு பொருளுநீ
　　கயிலாயர் பாகம்நீ குயிலார் மொழிச்சிநீ
அலைசேர் மடந்தைநீ அரியா சனத்திநீ
　　ஆங்கார றீங்கார ஓங்கார மானநீ
குலமான கோவலரைத் தேடியே வந்தநீ
　　கூடல்மது ராபுரி வளத்தை யழித்தநீ
தலமான செட்டிபா ளையமீதில் வளர்கின்ற
　　தையல்கண் ணகையைஅநு தினமும்மற வேனே　50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாம லனுதினமு முனைநினைப் பவர்தமக்கு
வந்தபிணி நோய்கிரக தீவினை யகற்றித்
திறமான வணிகேசர் குலமாக வந்தநீ
திந்தோ மெனநடன மாடுமுத் தமியே
குறையாமல் முத்தமிழ்க் கேஅருள் கொடுக்கும்
குங்குமச் செல்வியே குமுதவா யாளே
நறைமேவு செட்டிபா ளையநகரில் வாழ்கின்ற
நாயகிதன் னாமம்மொரு நாளுமய ரேனே 51

மலர்மேவு குளிர்சோலை வளர்கோல மயிலார்
வருகீத மொழிஓசை மருமேவு குயிலார்
தலமேழு மறிவான வணிகேசர் குலமீது
தனிலேயோ ரவதார மெனவாழ்பெண் ணரசார்
பறமேளம் உயர்கீதம் முரசோடு தவில்தாரை
பலநாத சுரஓசை பலநாளு மதிர
நலமேவு செட்டிபா ளையமீதில் வாழ்கின்ற
நாயகிதன் னாமமொரு நாளுமய ரேனே 52

கருணைமுகில் மாவில்வடு வாகியே மீனவன்
கண்ணையூ னாகவே காரியாய் நின்றாய்
தருவனைய கணிதர்வந் தெண்ணியே பார்த்தபின்
தையலிவ ளால்மதுரை தானழியு மென்ன
மருவனைய காவேரி தனிலடைய விட்டபின்
மானாகர் மகளென வந்தவ தரித்தே
செருவனைய கோவலற் கேபாரி யாய்வந்த
செட்டிபா ளையமேவு செல்வமா தாவே 53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பநற் பாஷையும் கல்லாமல் அறிவையும்
சத்துருவை வெல்லவும் சித்துவிளை யாடவும்
நற்பரி புகுதவும் பெருவாழ்வு கூரவும்
நல்குமே யுன்னை நினைப்பவர்க் கெல்லாம்
பொற்பணி பாரம் பொறாதசிற் றிடையே
பூவரசு மேவு தொழுவரிடம் புரிவாய்
கல்லடியில் வாழும் கற்பக விருட்சமே
கன்னியே துறையுறைக் கண்ணகைத் தாயே 54

சோடசக லாமதிய மென்ன அழ கெறிப்பச்
சோதிமுக மண்டலமும் மகரகுண்டலமும்
ஏடவிழ் பசுங்குமுக அமிர்தவா யழகும்
இன்பமங் கலநாணு மிருகுவளை விழியும்
பாடகமும் நூபுரமும் இட்டபொன் னடியும்
பச்சை பசுந்தோடும் பத்தினியா ரெனவே
பீட தா மரையுமெப் போதுகண் டுய்வேன்
பேடையே மகிழடித் தீவுமா தாவே 55

எண்ணமுறு பரிவார வீரர்களு மேதழைத்து
எழில்பெற்ற ராசசிங்க ராசனும் வாழத்
திண்ணமுற வேபுவிக ளேழுந் தழைத்திடத்
திங்கள்மும் மாரிமழை பொங்கிமிக எங்கும்
வண்மை யுவணிகர்வேளார் தமிழர்கன்று காலியும்
வாழவே வரமருள வந்தமண் முனையூர்
கண்ணகையை என்னுடைய கனவிலும் நாவிலும்
கருதவினை யொருகோடி காதமோ டிடுமே 56

குங்கும மலர்க்காவில் வண்டிசைகள் பாடக்
கூவுகுயில் மாவின்மிசை யேயிசைகள் பாடச்
சங்குமறை நால்வேத முத்தமிழ்கள் பாடச்
சத்தமுள கடலேழும் ஒன்றென முழங்க
மங்கையர் மலர்க்கைகொடு பணிவிடைகள் செய்ய
வாணர்கவி ராகஇசை பாடமங் கலமும்
பொங்குபுகழ் வந்தாறு மூலைநகர் வாழவரு
பொற்பாத மெனவினைகள் அற்றோடி விடுமே 57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தார மானதொரு வெள்ளம் பெரும்புயல்
மைக்கட லுங்கரிய வானிடி முழக்கும்
சந்தான மாகிய பெரும்படைகள் நோய்பிணி
சகலவினை இடையூறு சண்டைகல கங்கள்
வந்தாறு மூலைப் பதிக்கொன்றும் என்றும்
வாராம லேகாத்து ரெட்சிக்க வேணும்
செந்தா மரைத்திருவே யன்னநடை யாளே
செகதலத் தோர்கள்வினை தீர்த்தமா தாவே 58

கொந்தாடு மதுமலர்க் குழல்விரித் தாயே
கோவலன் படுகளந் தனில்நடந் தாயே
அந்தோ எனக்கதறி யழுதுநொந் தாயே
அவ்வணிக னுக்குயிர் கொடுத்தளித் தாயே
செந்தாடு மதுரைநகர் தீயெரித் தாயே
தென்னவன் உயிரழிய வேசினந் தாயே
வந்தாறு மூலைநகர் வாழவந்த தாயே
வல்வினை தணித்தகண் ணகைஎனும் தாயே 59

உற்றபுகழ் சேர்கின்ற செட்டிவெள் ளாளரும்
உயர்வுற்ற முக்கியர்க ளுடன்மற்று முள்ளோரும்
கொற்றவர்கள் பரிவார வீரர்களும் ஆயிரம்
கோடிகா லம்வரை நாடியருள் புரிவாய்
பெற்றதொரு வேளாண்மை மிகவிளைய மழைவெள்ளம்
பெருகிமிக வாழ்வுபெற் றினிதாக வாழக்
கற்றவர்கள் வந்தாறு மூலைநகர் வாழ்கின்ற
கண்ணகையை யநவரத காலமய ரேனே 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிமா னாகர்மக ளாகவந் தாயே
தென்னவன் பதியழிய வேசினந் தாயே
வட்டமுலை யைத்திருகி விட்டெறிந் தாயே
மாசாத்து வார்மகனை நீயுகந் தாயே
பட்டபுல வற்குநற் பயன்உகந் தாயே
பரிவோடு நீ லாவணைப் பதியில்வந் தாயே
எட்டுவரை யுன்புகழ் விளங்கவந் தாயே
இனியகற் புடையகண் ணகையெனுந் தாயே 61

சீர்வணிகர் பெருமான் சிலம்புவிலை கூறத்
தெருவினிடை தட்டானும் எதிர்கொண்டு வரவே
பாராளு மீனவன் கள்வனிவ னென்றே
பரிவோடு கொல்லவே வளவனெதிர் சென்று
ஏர்மேவு தன்கிரி யெறிந்துமது ராபுரி
இந்துகுல மன்னனை யெரித்தநா யகியே
கார் புங்கை நிணல் சூழ்துறை நீலாவணை வாழ்கின்ற
கண்ணகை எண்ணவினை காதமோ டிடுமே 62

வாரைநிக ரானவிழி மாதர்நட மாட
வண்டமிழ் தெரிந்துகவி வாணரிசை பாடப்
பூரையென வேஅரு கிருந்தவர் துதிக்கப்
பொற்செழியன் மீனவன் இருந்தகொலு மீதே
காரைநிக ரானக ருங்குழல் விரித்துக்
காவல னுடன்பெரு வழக்கினை யுரைத்துக்
காரைநக ராதபதி யோர்பரவு மீசன்
காமனகர் வாழ்குளக் கண்டியுறை மாதே 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறுபொற் குழல்விரித் தனல்மடுத் தவளே
திகழுபொற் பருமணித் தரிசிலிட் டவளே
வழுதியைக் கொலைபடுத் தனல்மடுத் தவளே
மதுரையிற் பரிபுர வழக்குரைத்த தவளே
புதுமணித் திலதமிட் டணிமுகத் தினளே
புயல்மழைக் கினியகற் புடைமடக் கிளியே
கதிர்மதிப் பிறையையொப் பெனுமுகத் தினளே
கதிர்நகர்க் கினியகற் புடையபத் தினியே 64

அக்கினிமுன் னேபஞ் சிருக்குமோ வானத்
தருக்கன்முன் னேபனிகள் அண்டுமோ கண்டாய்
கொக்கினம் ராசாளி முன்னே யிருக்குமோ
கொற்றவன்முன் னேறுமா றிட்டகுடி உய்யுமோ
மிக்கதுணை நீயென்று நம்பிஉனைப் பாட
வேளையென் றால்எனது வினைநோ யிருக்குமோ
தக்கபுகழ் மேவுமா காமத்தில் வாழும்
தாயே தமிழ்க்குதவு மூர்க்கமா தாவே 65

வணக்கமுட னேமல்லி கைத்தீவு தன்னில்
வந்துநின் றெல்லோரும் மாதாவே யின்று
இணக்கமுடன் தேங்கா யொன்றுதான் வேணும்
எங்களா லேஇதற் கேதுசெய் வோமெனப்
பணப்படுவ தில்லையோ தேங்காயொன்று வீழப்
பண்ணுவாய் என்றுபல ரும்துதிப்ப வேதான்
கணப்பொழுதி லேதென் னங்கனியை வீழ்வித்த
கற்புடைய மூர்க்கமா தாவைமற வேனே 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுலவு மேனியழ குங்களப முலையும்
புண்டரிக மொத்தமுக மும்புருவ அழகும்
மின்னுலவு சிற்றிடையி னிற்துகி லுடுத்த
மென்மையழ குங்கருணை வெண்ணகையி னழகும்
மன்னிய மணிக்கனக பூணார வழகும்
மைக்குழல் முடித்தவழ கும்வடிவு முடைய
கன்னியென வந்தெனது கண்ணைத் துடைத்த
கற்புடைய மூர்க்கமா தாவைமற வேனே 67

தருவாகி யேமதுரை மீனவனை மாறு செய்து
தண்டமிழ் விளங்கவொரு சங்கீத மானாய்
பொருநாத கீதவின்ப அவதார மாகியே
பூதல மதிக்கவரு பொன்னகர்த் திருவே
ஒருநாளு மறவாமலேஉவந் தோர்கள்
உள்ளமதி லேஉறையு மோவியமின் னாளே
கருமாவை யன்றுரித் தோர்தமக் கன்பான
கண்ணகை நமக்குவெகு கருணைதரு வாயே 68

அங்கணா மைக்கடவை காரேறு நகர்எருவில்
ஆனதம் பிலுவிலொடு வீரமுனை துறைநீலாவணையும்
பங்கைசேர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்
பகுதிபெறு வந்தாறு மூலையொடு பதியும்
திங்கள்நேர் ஒத்தநுதல் எங்குமீ திற்பெரிய
தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு பங்கயமா தின்பெருமை
எந்தனா விற்கனவில் என்றுமக லாதே 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியொடு தொழுவோர்கள் இடர்கல வருள்கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்
மெய்த்தபுகழ் வீரமுனை துறைநீலாவணை கல்முனை
கல்லாறு மகிழூர்செட்டி பாளையம் எருவில்
வைத்தமகி ழடிச்சோலை முதலைக்குடா மண்முனையூர்
வளமை புதுக்குடியிருப்பு நகர் வந்தாறுமூலை
இத்தனை தலங்களிலும் அங்கணா மைக்கடவை
என வந்து காரைநகர் இனிதிருந் தவளே 70

பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை கல்முனை
பகுதிபெறு கல்லாறு துறைநீலாவணை மகிழூர்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத லைக்குடாகொக்கட்டிச்சோலை
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை நகர்
அன்பான சிற்றாண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே 71

தவமான சிவசமய முறுதிருக் கோயில்வளர்
தருபோரை தீவுநகர் தான்தோன்று வார்தலம்
சிவஞான குருநாதர் பூசனை புரிந்துபின்
திகழ்கதிர் காம நகர் தில்லைமண் டூரும்
புவிவாழி நீதிமனு நூல்முறைமை வாழி
பூதலம் வாழிபுவி யோர்களும் வாழி
உவராழி சூழ்உலகில் வருகாரை தீவுவளர்
உத்தமியும் வாழிநிதம் உதயகிரி எனவே 72





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# தம்பிலுவில் கண்ணகை அம்மன் மழைக்காவியம்

அரியபுவி மகளுமலை கடலிலுறைபவனும்
அரவுதனை அணி பவனும் மலை அரசன் மகள் உமையும்
பெரியதவமுனியிருக்ஷி மலரயனும் மாலும்
பெருமை செறிகலைமகளு ஊர்வசியுமிந்திரனும்
தெரியவரி அனுதினமும் உனது பதமலரை
தெண்டனிட்டடிபணியவே மனமிரங்கி
விரிவுசெறிகுளமதுகள் நிறைய மழைபொழிய வரு
மேவிவளர் ஐந்து கரவிக்கினேஸ்பரனே. 1

ஆழமுறு கடலிநீர் வான மது வருசித்து
அகலமுறு ஆறு குளம் நிறைய மழைபொழிய
கோளது குணங்கிட இராசியது மேவியே
கொடிய வெயிலல்லாது மழைபொழிவதில்லையம்மா
நாளது தெரிந்து மறைவே தியர்களோதவே
நாங்கள் படுதுயர்கண்டு தாங்கரிது வெள்ளம்
தாழமுறு குளமதுகள் நிறையவே நின்கிருபை
தந்துதவு தம்பிலுவில் தங்குமாதாவே 2

வில்லிடப னுளவனொடு கோழ்கும்பராசிகளில்
மேவியுறையவாய் வெள்ளி மேவு நாளதனில்
நல்லமதியணை கேசரி யோக முற்று
நன்மைபெருகுருச் சந்திரன் ஆனநாள் அதன் பின்
சொல்லரிய விடமுற்ற நேரமதில் முகில்கள்
சொரிகின்ற சோரமழையெனவே மொழிந்து
நெல்விளைவு பெற உனது திருமனமிரங்கியே
நிமிசத்தில் மழை உதவு மலரழகமயிலே 3

மலரழக மதுகுலைய வண்ணமுறு முடல் குலைய
வடிவமுறு இடைதுவள மதிநுதலில் வேர்வை
திலதமெழுதிய தழியவே யிலின் மிசைபுள்கொழுகு
திருமேனி கருகவெளி வரவேணுமேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமுளுதும் பொற்ற தாய்யலவோ மழைவெள்ளம்
ஒரு நாழிகை பொழுதில் உதவொண்ணா தோதான்
குலதிலக வணிகர் குல வனிதையே தம்பிலுவில்
குடிகொண்ட பத்தினிக் கோதை கண்ணகியே 4

செப்பு மீதலை கடலில் வேலை முன்னிருந்தாய்
சிட்டமாய் யிடையரிடசேரியில் வளர்ந்தாய்
கொப்பு மாவின் கனிய தாகமுன்னிருந்தாய்
கோநகர் தம்பிலுவில் கோயிலிலிருந்தாய்
இப்பனைய இறக்க வெளி ஆற்றிடை இருந்தாய்
எப்பம்மா மழை தருவதென்று நீ இருந்தாய்
தப்பினால் உலக முறுவார்கள் துயர்கண்டாய்
தற்பரா பரனுதவு சக்தி கண்ணகியே 5

தண்ணீரில்லா மல்வயல் சாலிகள் இளங்கதிர்கள்
தலைசோர வயலிலுள்ள சாமைபுல் தவிக்க
கண்ணீரினால் மூழ்கி நினைவு துயரின்றி
கண் கலங்கப்படும் கவலையறியாயோ
மண்ணீரினால் நுரை மதிகமே நதியோடியே
வரவெள்ள இப்பவொரு மழைதரவேணும்
பெண்ணீர்மையான குண் காரணச் செல்வியே
பேசு தம்பிலு விலுறை பெண்ணரசியா 6

எந்தவிதமான பிளை செய்தாலும்நீ பொறுத்
ஏழைஅடியார்கள் தன் மேல் மனமிரங்கி
நொந்த கண்ணாலிப்போ ஆற்றிலொரு மழைவெள்ளம்
நூதனமதாக வே நீயருள வேணும்
கொந்தழகுவிழிமடவார்கள் நீரோடிவர
கொண்டாடவாவி கரை நின்றாட மலரின்
தெந்தென தெனாவென்று வண்டிசைகள் பாட வரு
தம்பிலுவிலூர் தழைய வந்த மாதாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் திசைகெட்டது கரைக்குள் அடையாதோ
கட்டையினில் வைத்த பிணமற்றுயிர்கொள்ளாதோ
உப்பளமதிற்பதர் விதைக்க முளையாதோ
உத்தரவு ஊமையன் உரைக்க அறியானோ
இப்பிறவியர் குருடு இப்ப தெளியாதோ
எப்பம் மா மாழை தருவதென்று நீயிருந்தாய்
தப்பினால் உலகமுறுவார்கள் துயர்கண்டாய்
தற்பராபரனுதவு சக்தி கண்ணகையே 8

கெற்ப மாயுலகமதில் வந்தவதரித்தாய்
கேளுடைய பாலூறக் கிருபையது வைத்தாய்
நெற்பாகிய பயிர்கள் வாடுதலைக் கண்டு
நின்றழுதபேர் மகிழ மின்னுமழைதாராய்
அற்பனென்றென்னை இகழ்தாலும் இப்பாடல்
தனிலுள்ள சீர் தனுக்காயினுமிரங்கி
சற்பமாமணி நூபுரத்திமுருகேசர் வளர்
தம்பிலுவிலூரிலுறை உலக மாதாவே 9

தேனுலவு கற்பதரு நீள நிழலி நிற்பனுடை
தேவகி மணிந்த விசின் மீதுறையுனக்கு
கானது வடத்து மணலாற்றிடை மணல்பரவு
காவணமதிக்க விதியேதுவகை செய்யம்மா
வானமுளமட்டு மழை இன்று தருவாயோ
வருஇருள் மழை வெள்ளம் நாளைவர வேணும்
பானல்மொழி நற்கருணை மாரி சொரிவிப்பாய்
பார்புகழ் சேர் தம்பிலுவில் வாழுமாதாவே

கற்புநெறிதவறாத நீடுபயில் மங்கையர்கள்
கானவெயில் மூடுபனி காவண மிருப்ப
எப்போநீதம்பிலுவில் வந்துறைந்தாயே
இன்னமொன்றில்லையே என்ன நினைவம்மா 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்புவெயில் கானலது பகலெல்லாம் வீச
வீழ்வேர்வையால் முழுமேனியது நனைக்க
செப்பமுடனே மழை தந்துதவ வேணும்
செல்வியே தம்பிலுவில் வாழுமாதாவே 11

கடல் கடைய உலகின் முன் அமுதொடு பிறந்தாய்
கலைதெரிய மதுரைநகர் வழுதியை முனித்தாய்
விடவரவின் மணியை ஒத்தரிசியிலணிந்தாய்
மிதிலைதனில் மலையரசன் மகளென வளர்ந்தாய்
அடவிதனில் மருதடியில் விடுதி விடவந்தாய்
அரகரா உனதருமை உடலிடையில் நொந்தாய்
திடுதிடென மழையுதவு சடுதியிலெழுப்பாய்
சீருலவு தம்பிலுவில் வாழுமாதாவே 12

அட்டவகையான தொழில் செய்ய நடவாதோ
அறிவில்லாதவனுமுலகரசு புரியானோ
பட்டமரமானது தழைத்து வளராதோ
பழமைசெறி கிழவமாரிளமை பெறறாரோ
இட்டமழை எங்கும் இனியிப்ப பொழியாதோ
விட்டவெளியும் முளுவிளைச்சல் விளையாதோ
திட்டமுடனே கிருபைசெய்திடுவை யானால்
சீருலவு தம்பிலுவில் வாழுமாதாவே 13

சோதிமதி பானுகழல் பொய்திடுனும் மேலோர்
சொன்ன மொழி தவறாத குறி தவறினாலும்
காதலுறு வேதவிதி பொய்திடினுமுனது
கற்பு நெறி பொய்த்த தொரு காலமது லுண்டோ
காதவடியார்கள் பணிவிடைகாரனுன்னுடைய
கட்டாடி கண்ணப்பனுக்காயினுமிரங்கி
மோதுகுழரில் தாரை மழை யைநீயருள வேணும்
மோது அலை தம்பிலுலவில் வாழு மாதாவே 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுவளர் தம்பிலுவிலூர் வாழ வாழி
வரிசை செறி வணிகர்குலமாதுமையும் வாழி
நீதிசெறி கண்ண மகராச சிங்கனும் வாழி
நீலமயில் ஏறு கதிர் வேல் முருகர் வாழி
வேதமுடனைந் தெளுந்தோது வோர் வாழி
வெண்ணீறு சிவமயமும் மேலுயுர வாழி
பாதிமதி சூடு மரன் பாத மறவாமற்
பாடினவர் வாழி கதிர் காமும் வாழ வாழயவே 15

உ
திருச்சிற்றம்பலம்

# பட்டிநகர்க் கண்ணகை அம்மன் மழைக்காவியம்

சீர்சிறந் திடுகரட விகடதட மும்மதச்
செம்மலுட னாதிபர மேஸ்பரனு மாலும்
தார்சிறந் திடுபசிய மஞ்ஞைவா கனனும்
தங்குகெரு டத்துவச மாலும்நா ரணியும்
பார்சிறந் திடுகமல நான்முகன் தேவியும்
பட்டிநகர் மேவிவளர் பாவையு மகிழ்ந்து
கார்சிறந் திடுகவிதை பாடவருள் தந்துமழை
காதலுட னேயுதவ நாளுநினை விற்பாம் 1

நிலையான நவக்கிரகம் நின்றநிலை யாலோ
நீதிபுரி மன்னர்செங் கோல்வழுவி னாலோ
தொலையாத மானிடர்செய் வஞ்சனையி னாலோ
தொல்லுலக மெங்குமழை யில்லையென வாட
கலையாத செந்நெல்வயல் விளைவதுவு மின்றிக்
கதிர்குடலை தலைசோர மானிடர்க ளேங்க
உலையாத உனது அருள் தந்துமழை பொழிய வருள்
ஓங்கிவளர் பட்டிநகர் வாழுமா தாவே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாவு மானகௌ மாரியொடு வாலை
புவனைதிரி புரையென்னு மாதிமுதற் சத்தி
தாதா வுனதுமன மானது மகிழ்ந்து
தாரணியோ ரீடேற மழையுதவ வேணும்
வாதாடு கொம்புமுலை மங்கையர்கள் நீராடு
வாவிதனில் மருமலர்கள் வழமைபோல் மணம் வீச
கோதாடு குயில்கூவு பட்டிநகர் மேவிவளர்
கோவலன் தேவியென வந்தகண் ணகையே 3

கண்ணீரி னால்வந்த கனகபத் தினியே
கழனியுறு வேளாண்மை புன்செய்சே னைப்பயிர்கள்
உண்ணீர்மை குன்றிமிக வாடுதே யம்மா
ஒரு நொடியில மழைவெள்ள மோடிவரச் செய்வாய்
மண்ணீரி னால் நுரை திரளயெழ வாறோடை
வாவிகுள மெங்குமே நீர்பெருக வேணும்
பெண்ணீர்மை தங்கிவளர் மாசற்ற செல்வியே
பேசரிய பட்டிநகர் வாழுமா தாயே. 4

மாமேவு மக்கரைப் பற்றுநகர் மானிடர்கள்
வயல்களது புரனாக வாடுதே யம்மா
தேமேவு செஞ்சாலி விளைவதுவு மில்லையோ
தேசமழை பெய்து நகர் செழிப்பதுவு மெப்போ
காமேவு மருமலர்கள் கனிவகைகள் சொரிகின்ற
கழனிசெறி கமலமலர் வாவிசூழ் நகரில்
பாமேவு பாடலிற் பிழைபொறுத் தாளுவாய்
பட்டிநகர் மேவிவளர் பாவை கண்ணகையே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதேவல் லவனோடு கடகவிடை கும்பத்தில்
வருவெள்ளி சுபனாகி மருவுநாள் தன்னில்
போதாளுங் குருசந்திர யோகமத னாலும்
புகழ்மேவு கேசரி யோகமத னாலும்
நிதமுட னேழுகில்கள் சோனை மழையாக
நீங்காது பொழியவே நின்கருணை தருவாய்
ஆதரவு தந்துமழை பொழியவருள் செய்வாய்
அருள்பெருகு பட்டிநகர் வாழுமா தாவே. 6

பத்திசெறி யுத்தமர்கள் நித்தமுனை மறவாது
பாதபூச னைபுரியவே மேகமதெ ழுந்து
புத்திசெறி கடலின்நீ ரானது முகந்து
பூலோக மெங்குமிரு ளாகவே மூடி
இத்தினம் நீரில்லை நாளையொரு மழை வெள்ளம்
ஏழைகள் தனக்குமன மானது மகிழ்ந்து
சித்திபெற வேயுனது கிருபைதந் தாள்வாய்
திருமருவு பட்டிநகர் வாழுமா தாவே 7

மங்கையே மானாகர் மகளாக வந்தாய்
மதுரைநகர் மாறனொடு தீயினுக் கீந்தாய்
செங்கைதனில் நற்சிலம்பேந்தியே நின்றாய்
செட்டிமக னோடுதென் கூடலில் நடந்தாய்
கொங்கைதனில் வெண்ணெய்தனை யப்பிடவு கந்தாய்
கோலிடையர்சேரி குளிர்ந்திடுக வென்றாய்
எங்கையடா என்கணவ னென்றுபழி கேட்டாய்
ஏருலவ பட்டிநகர் வாழுமா தாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகிநீ யல்லாது வேறு யார் துணைசெய்வர்
நாட்டில் மழையில்லாது நாங்கள்படு மின்னல்
தாயா யிருப்பதாற் பார்த்திருத்தல் நீதியோ
தரணியோர் பிழைபொறுத் தாளநினை யம்மா
வாயார மானிடர்கள் சொற்பிழை பொறுத்து
மனதிலருள் மேவினால் இருள்வேணு மோதான்
சேயாருங் கமலமலர் வாவிபுடை சூழவளர்
திருமருவு பட்டிநகர் வாழுமா தாவே 9

அரசியே யுனதுவிழி யருள்சிறிது வந்தால்
ஆலவிட வேகமது தானடங் காதோ
கரைமேவு கடல்நீரு முவர்மாறி டாதோ
கால்வடவை நீர்பூமி வாய்வொடுங் காதோ
தரைமீ திறந்தவ ருயிர்பெற் றெழாரோ
தருணமதி லேசோனை மழையிறங் காதோ
பரவைநிகர் மழுவரசர்(மழுவராயன்)குலமருகில் மேவிவளர்
பட்டிநகர் தன்னிலுறை செட்டிமா தாவே 10

ஆதிபர னாருதவு வேதநெறி வாழி
அருள்பெருகு திருநீறு சிவசமயம் வாழி
நீதிசெறி பண்டார வன்னியர்கள் வாழி
நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி
சோதியுருவான கண்ணகைத் தாயும் வாழியவள்
சிலம்பிங்கு கொண்டுவந்த கயவாகு வாழி
பாதிமதி சூடுமர னாருடலி லணியும்
பண்புசெறி நாகம்மை வாழவா ழியதே 11

சுபம்
கண்ணகை அம்மன் காவியப் பாடல்கள்
முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின்

## இதர வெளியீடுகள்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை | 150 |
| முத்தான முருகன் தோத்திரப்பாடல் | 160 |
| திருமுருகன் திருவளி நடைக்கும்மி | 130 |
| கழுகு மலைப்பத்து | 110 |
| வைகுந்த மோட்ச மாலை | 100 |
| பசுவின் கதை | 110 |
| சிவமுத்து மணி மாலை | 155 |
| சித்த லை ஞானக்கும்மி | 150 |
| காளிய ன் காவியப்பாடல் | 150 |
| பேச்சி  காவியப்பாடல் | 135 |
| தேவார திருமுறை பஞ்சபுராணம் | 150 |
| சிவனுமை திருப்பாடல் | 160 |
| முப்பது சில்லறைக் கோர்வை | 200 |
| விவேக சிந்தாமணி | 180 |
| மாரியம்மன் குறத்திப் பாடல் | 140 |
| நாகம்மை புகழ் மாலை | 130 |
| மடத்தடி மீனாட்சியம்மன் பாடல் | 135 |
| கடல் நாட்சியம்மன் பாடல் | 135 |
| வராகி மாலை | 350 |
| குல தெய்வ வழிபாடு | 300 |
| கண்ணகை அம்மன் காவியப்பாடல் | 155 |

மேற்படி நூல்கள் தேவையானோர் கீழ்வரும் முகவரியில்
தொடர்பு கொண்டு பெறமுடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி, சேனைக்குடியிருப்பு -01B
T.P :0777653866 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org